# வகுப்பு : 12 அடைவுத் தேர்வு 2023-24

## தமிழ்

மொத்த மதிப்பெண்கள் : 100

நேரம் : 1.30 மணி

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர்
அ) டார்வின் ஆ) நியூட்டன் இ) தாமஸ் ஆல்வா எடிசன் ஈ) ஐன்ஸ்டீன்
2. படிப்பிடிப்புக் கருவியோடு திரையிடும் கருவியைக் கண்டுபிடித்தவர் -----
அ) ஜார்ஜ்மிலி ஆ) லூமியர் சகோதரர்கள் இ) தாமஸ் ஆல்வா எடிசன் ஈ) சார்லி சாப்ளின்
3. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர்
அ) ஜார்ஜ் கிங்ஸ்டன் ஆ) ஜார்ஜ் மில்டன் இ) ஜார்ஜ் எமிலி ஈ) ஜார்ஜ் மிலி
4. ---- என்பது கதை நகர்வுக்கு உதவுவது
அ) காட்சி ஆ) சாட்சி இ) ஆட்சி ஈ) ஒளிப்பதிவு
5. ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி இருளாக்கிக் காட்டுவதற்கு --- என்று பெயர்
அ) காட்சி உதயம் ஆ) காட்சி மறைவு இ) காட்சி கலவை ஈ) காட்சி அழிப்பு
6. நடிகரை முன்பின் மேல் என்ற பல கோணங்களில் படம் பிடித்துத் திரையில் காட்டுவதால், திரைப்படத்தை --- என வகைப்படுத்துகிறோம்.
அ) இருபரிமாணக் கலை ஆ) மேல்நோக்கு பரிமாணக்கலை
இ) கீழ்நோக்கு பரிமாணக்கலை ஈ) முப்பரிமாணக்கலை
7. திரைப்படம் என்பது ஒரு வகையில் பார்த்தால் நாடகத்தின் ---- எனலாம்
அ) தந்தை ஆ) தாய் இ) குழந்தை ஈ) ஆசிரியர்
8. நாடகத்தை ---- எனக் கூறுவர்
அ) ஒற்றைக் கோணக்கலை ஆ) இரட்டைக்கோணக்கலை
இ) முப்பரிமாணக்கலை ஈ) கீழ்நோக்கு பரிமாணக்கலை
9. "மனித குலத்திற்குத் தேவை போரல்ல; நல்லுணர்வும் அன்பும் தான்" என்பதை உணர்த்திய சார்லி சாப்ளின் படம்
அ) தி கிட் ஆ) தி கிரேட் டிக்டேட்டர் இ) சிட்டி லைட்ஸ் ஈ) மாடர்ன் டைம்ஸ்
10. நம் கண்கள் தாமாகவே அகண்ட கோணத்தைத் தேர்வுசெய்து கொள்வதை ---- என்கிறோம்
அ) மீ அண்மைக் காட்சித்துணிப்பு ஆ) நடுக் காட்சித்துணிப்பு
இ) மீ சேய்மைக் காட்சித்துணிப்பு ஈ) சேய்மைக் காட்சித்துணிப்பு
11. சார்லி சாப்ளின், வறுமைமிக்க தன் இளமை வாழ்வை --- என்ற வெற்றிப் படமாக்கினார்.
அ) தி சர்க்கஸ் ஆ) சிட்டி லைட்ஸ் இ) மாடர்ன் டைம்ஸ் ஈ) தி கிட்
12. ------- திரைபடத்தின் உணர்வுகளை வெளிக்கொணர உதவும் மற்றொரு கலை
அ) பின்னணி இசை ஆ) பாடல்கள் இ) வசனம் ஈ) திரைக்கதை
13. கர்நாடக மாநிலத்தில் ----- என்னும் சிற்றூர் மக்கள் திரைப்படம் பார்த்ததே இல்லை
அ) கும்பல கோடு ஆ) ஹெக்கோடு இ) கூர்க் ஈ) நரசபுரா
14. "கிராண்ட் கபே" விடுதியில் லூமியர் சகோதரர்கள் திரையிட்ட சில துண்டுப் படங்களில் ஒன்று -------
அ) உறவினர் வருகை ஆ) பேருந்தின் வகை இ) ரயிலின் வருகை ஈ) மகிழுந்தின் வருகை
15. "NARRATOR" (நேரேட்டர்) என்பவர் ------
அ) ஒளிப்பதிவாளர் ஆ) ஒலிப்பதிவாளர் இ) இசையமைப்பாளர் ஈ) கதை சொல்லி
16. ஆர்ப்பரிக்கும் கடல்
அதன் அடித்தளம்
மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்
இ) நிறைகுடம் நீர்த்தளும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
17. ஏழ் ஆண்டு இயற்றி, ஓர் ஈராறு ஆண்டில்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி - தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி
18. பொருத்துக.
அ) ஆமந்திரிகை - 1. பட்டத்து யானை
ஆ) அரசு உவா - 2. மூங்கில்
இ) கழஞ்சு - 3. இடக்கை வாத்தியம்
ஈ) கழை - 4. எடை அளவு
அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1, 2, 3, 4 ஈ) 4, 3, 2, 1
19. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
20. தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு, முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாகத் திகழ்வது ----
அ) சிலப்பதிகாரம் ஆ) சீவகசிந்தாமணி இ) நீலகேசி ஈ) அகநானூறு
21. "நித்திலம்" என்பதன் பொருள்
அ) மாணிக்கம் ஆ) முத்து இ) பவளம் ஈ) வைரம்
22. அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆடல்மகளுக்குத் ------ அளித்துச் சிறப்பிப்பர்
அ) தலைப்பாகை ஆ) தானியம் இ) தலைக்கோல்
23. தலைக்கோலைப் புண்ணிய நதிகளிலிருந்து ---- முகந்து வந்த நன்னீரால் நீராட்டுவர்
அ) செம்புக் குடங்களில் ஆ) வெள்ளிக் குடங்களில் இ) பித்தளைக் குடங்களில் ஈ) பொற்குடங்களில்



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

24. [illegible] தேர்ந்து வலம் வந்து அதன் மேல் உள்ள ---- தலைக்கோலைக் கொடுக்கும்
அ) மன்னனிடம் ஆ) அரசியிடம் இ) கவிஞனிடம் ஈ) இசையாளனிடம்
25. "ஆமந்திரிகை" என்பது ----
அ) மத்தள வாத்தியம் ஆ) இடக்கை வாத்தியம் இ) இன்னிசை வாத்தியம் ஈ) ஊதும் கருவி
26. "[illegible]" ---- அளபெடை
அ) செய்யுளிசை ஆ) இன்னிசை இ) சொல்லிசை ஈ) ஒற்று
27. மாதவி தனது நாட்டியத் திறமைக்காகப் பெற்ற பட்டம் ------
அ) நாட்டியப் பேரொளி ஆ) ஆடலரசி இ) தலைக்கோலி ஈ) செங்கோலி
28. மாதவி ஆடல் நூல் விதித்த முறைப்படி ---- கழஞ்சுப் பொன் மாலையை மன்னனிடமிருந்து பரிசாகப் பெற்றாள்
அ) ஆயிரத்தெட்டுக் ஆ) இரண்டாயிரத்தெட்டுக் இ) மூவாயிரத்தெட்டுக் ஈ) நாலாயிரத்தெட்டுக்
29. முதன் முதலாகப் பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு, கண்ணகி அரசனை எதிர்த்து வழக்காடியதைப் பாடியதால் சிலப்பதிகாரம் --- எனப்படுகிறது.
அ) குடிமக்கள் காப்பியம் ஆ) புரட்சிக் காப்பியம் இ) வரலாற்றுக் காப்பியம் ஈ) பொதுமைக் காப்பியம்
30. "கலி கண்காட்டும்" என்று மெய்ப்பாடு குறித்துக் குறிப்பிட்டவர் ------
அ) தொல்காப்பியர் ஆ) இளம்பூரணர் இ) பேராசிரியர் ஈ) சேனாவரையர்
31. கண்ணகி வானூர்தியில் வானுலகு சென்ற காட்சியைக் கண்ட குன்றவர்கள் அடைந்தது -----
அ) நகை ஆ) அழுகை இ) இளிவரல் ஈ) மருட்கை
32. "என்னைப் போல் சிவாஜி நடிப்பார்; ஆனால் என்னால் தான் சிவாஜிபோல் நடிக்க முடியாது" என்று கூறியவர்
அ) மார்லன் பிராண்டோ ஆ) பாலமுரளி இ) ஓமர்ஷெரீப் ஈ) ராஜ்கபூர்
33. வி.சி.கணேசனுக்கு "சிவாஜி கணேசன்" என்று பெயரிட்டவர்
அ) அண்ணாதுரை ஆ) எம்.ஜி.ஆர் இ) கலைஞர் ஈ) பெரியார்
34. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்
35. கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது எனப் பொருள் தருகிறது.
கூற்று 2 : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி
அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) இரண்டும் சரி
இ) கூற்று 2 சரி கூற்று 1 தவறு ஈ) இரண்டும் தவறு
36. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.
அ) காதை - 1. கந்தபுராணம்
ஆ) சருக்கம் - 2. சீவகசிந்தாமணி
இ) இலம்பகம் - 3. சூளாமணி
ஈ) படலம் - 4. சிலப்பதிகாரம்
அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 3 4 2 1 ஈ) 4 3 1 2
37. தவறான இணையைத் தேர்க. பாவகை இலக்கியம்
அ) விருத்தப்பா – நாலடியார் ஆ) ஆசிரியப்பா – அகநானூறு
இ) கலிவெண்பா – தூது ஈ) குறள்வெண்பா – திருக்குறள்
38. அல்லல் படுப்பதூஉம் இல் –எவரோடு பழகினால்?
அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர் இ) எண்ணியாங்கு எய்துவர் ஈ) தீயினத்தார்
39. திண்ணியர் என்பதன் பொருள்
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவிலார்
40. ஆராய்ந்து சொல்கிறவர்
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்
41. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்
அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர் ஆ) மனத்திட்பம் உடையவர்
இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர் ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்
42. எளியது, அரியது என்பன
அ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை ஆ) சொல்வது – சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு ஈ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது
43. வறுமையும் சிறுமையும் தருவது
அ) அறிவு ஆ) உட்பகை இ) தூது ஈ) சூது
44. பெரிய தேர்க்கு இன்றியமையாதது
அ) சக்கரம் ஆ) விளக்குகள் இ) அச்சாணி ஈ) அலங்காரம்
45. அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் ---- வாழ்வது போன்றது
அ) புலியுடன் ஆ) பாம்புடன் இ) நாயுடன் ஈ) கிளியுடன்
46. மக்களுக்கு இயற்கையறிவு எதனால் ஏற்படும்?
அ) இனத்தால் ஆ) பணத்தால் இ) செயலால் ஈ) மனத்தால்
47. நல்ல செயல்பாட்டிற்கு வேண்டியது ------
அ) உடல்உறுதி ஆ) மன உறுதி இ) நல்லினம் ஈ) தீயினம்
48. இ.ஆ.ப என்பதன் விரிவாக்கம்
அ) இந்திய அரசுப் பணி ஆ) இந்திய ஆட்சிப்பணி
இ) இந்திய ஆயுள் காப்பீட்டுப்பணி ஈ) இதர ஆணையர் பணி
49. "இலக்கியத்தில் மேலாண்மை" என்னும் நூலின் ஆசிரியர்
அ) தமிழ்நதி ஆ) ஐராவதம் மகாதேவன் இ) பிசிராந்தையார் ஈ) வெ.இறையன்பு



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

50. 1955 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்ற வெ.இறையன்பின் கவிதை நூல்
அ) ஏழாவது அறிவு ஆ) வாய்க்கால் மீன்கள்
இ) ஐ.ஏ.எஸ். வெற்றிப் படிக்கட்டுகள் ஈ) மூளைக்குள் சுற்றுலா

51. திட்டமிடுவதை ஒவ்வொரு ----செய்ய வேண்டும்
அ) நாளும் ஆ) வாரமும் இ) மாதமும் ஈ) ஆண்டும்

52. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பரணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

53. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

54. முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1,2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

55. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில், இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

56. யானை புக்க புலம் போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறருக்கும் பயன்படாது ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்கும் பயன்படும், தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

57. "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது
அ) குதிரைகள் இறக்குமதி ஆ) யானைகள் இறக்குமதி
இ) சிப்பாய்கள் இறக்குமதி ஈ) உயர்தரப் பொருட்கள் இறக்குமதி

58. யவனர்களின் கப்பல்களை நிறுத்தி வைக்க பயன்படுத்தப்பட்ட துறைமுகம்
அ) கொற்கை ஆ) தொண்டி இ) முசிறி ஈ) பூம்புகார்

59. யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக்கிக் கட்டுப்படுத்திய மன்னன்
அ) சேரன் செங்குட்டுவன் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்
இ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஈ) கணைக்கால் இரும்பொறை

60. ------ நமக்குள் உந்து சக்தியை உற்பத்தி செய்கிறார்கள் என்பது மேலாண்மை விதி
அ) போட்டியாளர்களே ஆ) வாடிக்கையாளர்களே இ) ஆசிரியர்களே ஈ) ரசிகர்களே

61. "எல்லார்க்கும் கள்ளனாய் ஏழிறப்பும் தீயனாய், என்று நிதியைக் கண்டபடி கையாள்பவரைக் குறிக்கும் இலக்கியம்
அ) ஆத்திசூடி ஆ) கொன்றை வேந்தன் இ) நல்வழி ஈ) மூதுரை

62. "துளிகள்" என்னும் நூலின் மூலம் உலகப்புகழ் பெற்றவர்
அ) ஷேக்ஸ்பியர் ஆ) டைடன் இ) ஸ்ட்ரேபோ ஈ) ஹிராக்ளிடஸ்

63. புத்திசாலிகள் பூனைகளையும் ---- ஆக்குவார்கள்
அ) எலி ஆ) புலி இ) குதிரை ஈ) யானை

64. புறநானூற்றில் ----ஆம் பாடலில் யவனரது கப்பல்கள் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது
அ) 56 ஆ) 66 இ) 76 ஈ) 86

65. "பிண்டம்" என்ற சொல்லின் பொருள்
அ) கரி ஆ) பரி இ) சரி ஈ) வரி

66. பிசிராந்தையார் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன்
அ) அறிவுடை நம்பி ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன் இ) பூதப்பாண்டியன் ஈ) அதிவீரராம பாண்டியன்

67. அரசனை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பை மேற்கொண்டவர்கள்
அ) அமைச்சர்கள் ஆ) எழுத்தாளர்கள் இ) சங்கப் புலவர்கள் ஈ) நீதிபதிகள்

68. ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நலவியல்புகளைச் சிறப்பித்துக் கூறுதல்
அ) வெட்சித்திணை ஆ) கரந்தைத்திணை இ) பொதுவியல்திணை ஈ) பாடாண்திணை

69. "காய்நெல் அறுத்து கவளம் கொளினே" என்ற புறநானூறு பாடலில் இடம் பெற்றுள்ள துறை -----
அ) பொருண்மொழிக் காஞ்சித் துறை ஆ) இயன்மொழித் துறை
இ) செவியறிவுறூஉ துறை ஈ) கூதிர்ப்பாசறை

70. "காய்நெல்" - என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

71. 'சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்' – இக்கட்டுரையின் ஆசிரியர்
அ) வெ.இறையன்பு ஆ) நீலகண்ட சாஸ்திரி இ) கே.வி.சுப்பிரமணியனார் ஈ) ஐராவதம் மகாதேவன்

72. 'சாபவிமோசனம்'; "அகலிகை" கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

73. 'செங்காயபன்' என்பவர்
அ) புத்தத்துறவி ஆ) சமணத்துறவி இ) சைவத்துறவி ஈ) வைணவத் துறவி

74. ஐராவதம் மகாதேவன் ---- ஆண்டுகள் கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்டார்
அ) 20 ஆ) 30 இ) 40 ஈ) 50

75. பின்வரும் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.
அ) கர்ணன் தோற்றான் போ ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி
இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தா போறான் தருமன்

76. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.
அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள் ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது
இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்
ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

77.பண்புக் குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.
அ) அறம் – 1. கர்ணன்
ஆ) வலிமை – 2. மனுநீதிச்சோழன்
இ) நீதி – 3. பீமன்
ஈ) வள்ளல் – 4. தருமன்
அ) 3 2 1 4 ஆ) 4 3 2 1 இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2

78.ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

79.தமிழர்களின் வரலாற்றில் இருண்ட காலம் என்று அழைக்கப்படுவது
அ) களப்பிரர் காலம் ஆ) சேரர் காலம் இ) சோழர் காலம் ஈ) பாண்டியர் காலம்

80.கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் -----
அ) தமிழ்நாட்டு வரலாறு ஆ) கொங்குநாட்டு வரலாறு
இ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் ஈ) மறைந்துபோன தமிழ்நூல்கள்

81. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் மீட்டுருவாக்க முயற்சிக்கு சான்றாகத் திகழும் நூல் ------
அ) சாசனச் செய்யுள் மஞ்சரி ஆ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
இ) தமிழ்நாடு வரலாறு ஈ) கொங்குநாட்டு வரலாறு

82.சமூகத்தின் இறுக்கமான குடும்பக் கட்டுமானத்தில் சிக்கித் தமது முகத்தைத் தொலைத்தவர்கள்
அ) குழந்தைகள் ஆ) உறவினர்கள் இ) ஆண்கள் ஈ) பெண்கள்

83.நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது
அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை
இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

84.இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்களின் எண்ணிக்கை
அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

85.'கிறித்துவக்கம்பன்' என்று அழைக்கப்படுபவர்
அ) ஜான் பான்யன் ஆ) ஜி. யு. போப் இ) கம்பர் ஈ) எச். ஏ. கிருட்டிணனார்

86.சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

87.கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

88.சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

89.மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?
அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

90.கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கியவன்
அ) காரி ஆ) பாரி இ) ஓரி ஈ) பேகன்

91. குறியீடுகளைப் பொருத்துக.
அ) பெண் – 1) சமாதானம்
ஆ) புறா – 2) வீரம்
இ) தராசு – 3) விளக்கு
ஈ) சிங்கம் – 4) நீதி
அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4

92.கூற்று : 19 ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.
காரணம் : பொதலோ, ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தவர்கள்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

93.'திட்டம்' என்னும் தலைப்பில் 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?
அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

94.குறியீட்டால் பொருளை உணர்த்துவது
அ) தொன்மம் ஆ) படிமம் இ) இறைச்சி ஈ) குறியீட்டியம்

95.தமிழைப் பொறுத்தவரை -------- காலம் முதல் குறியீட்டியத்தின் பயன்பாட்டை அறிய முடிகிறது.
அ) தொல்காப்பியர் காலம் ஆ) சோழர் காலம்
இ) பாண்டியர் காலம் ஈ) ஐரோப்பியர் காலம்

96.'கோடை மழை' இச்சிறுகதையின் ஆசிரியர்
அ) பூமணி ஆ) உத்தமசோழன் இ) சாந்தாதத் ஈ) சுரதா

97.'பெறறோர்' என்ற சொல்லின் பொருள்
அ) பேறுபெற்றோர் ஆ) பொறுப்புள்ளவர் இ) அன்புமிகுந்தோர் ஈ) பாசம் பொழிபவர்

98.சாந்தா தத் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பண்பு
அ) நன்றி ஆ) அன்பு இ) பொதுநலம் ஈ) மனிதநேயம்

99.'நன்மொழி' – புணர்ச்சி விதி கூறுக.
அ) அடியகரம் ஐயாதல் ஆ) ஆதிநீடல் இ) ஈறுபோதல் ஈ) இனமிகல்

100.சிறுபாணன் பயணம் முடித்த இடம் ------
அ) நல்லூர் ஆ) ஆமூர் இ) கிடங்கில் ஈ) எயிற்பட்டினம்



www.Padasalai.Net

CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com